கொழும்புத் தமிழ்ச் சங்கம்

(சபை வரைவுள்ளது)

(சங்கங்களுக்கான அரச கட்டளைச் சட்டத்தின்படி
பதிவு பெற்ற தமிழ் மொழிப் பண்பாட்டு அமைப்பு)

அறுபத்தெட்டாவது (68)
ஆண்டறிக்கை

2009 ~ 2010

தொடக்கம் : 22.03.1942 பதிவு எண் : எஸ். 73

இல 7, 57வது ஒழுங்கை
கொழும்பு - 06

தொலைபேசி இல: 0112363759 தொலைநகல்: 0112361381

இணையத்தளம்: www.colombotamilsangam.com
மின்னஞ்சல் : tamilsangamcolombo@yahoo.com

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

68ஆவது ஆண்டு அறிக்கை

தலைவர் அவர்களே, தமிழ்ச் சங்க உறுப்பினர்களே!

2009ஆம் ஆண்டு ஒக்டோபர் 1ஆம் திகதி தொடக்கம் 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் எமது தமிழ்ச் சங்கம் ஆற்றிய பணிகளை 68ஆவது ஆண்டறிக்கையாகச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

முன்னுரை

தமிழ் எமது தாய்மொழி. அதன் தொன்மை, செழுமை என்பன தமிழராகிய எமக்குப் பெருமை சேர்ப்பன. அதேசமயம், நவீன உலகின் செல்நெறிகளுக்கு ஏற்ப எம் தமிழன்னை மேலும் வளமுறவும், வளரவும் பணியாற்றுவது எமது கடமை! கடந்த 67 வருடங்களாக, கொழும்புத் தமிழ்ச் சங்கம், இந்த நோக்கங்களின் அடிப்படையில் தனது பணிகளைச் சிறப்புற ஆற்றி வருகிறது.

தொலைநோக்குக் கூற்று

தமிழ்மொழியைச் செழுமைப்படுத்தலும், அதன் வளர்ச்சியை ஊக்குவித்தலும், எமது தலையாய நோக்கங்கள் ஆகும்.

சங்கச் செயற்பணிக் கூற்று

சேவை அர்ப்பணிப்புடையோரின் ஒருமித்த ஒத்துழைப்பைக் கொண்டு தமிழ்ப்பண்பாட்டின் பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்து அவை ஒவ்வொன்றினதும் வளர்ச்சிக்கும், தமிழ் மொழியிலான விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கும், தமிழாய்வுக்கும் ஊக்கமளிப்பதுடன் உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள தமிழ்ப்பண்பாட்டு நிலையங்களின் தகவல் பரிமாற்ற நிறுவனமாக கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி, தமிழ் மொழியின் மேம்பாட்டுக்கான பங்களிப்பினை வழங்குதலும் வளர்ச்சியை ஊக்குவித்தலும்.

சங்கக் குறிக்கோள்கள்

- தமிழமொழி, தமிழ் இலக்கியம் என்பனவற்றின் ஆக்கத்துக்காக உழைத்தல்.
- தமிழ் மக்களின் அறநிலையங்களைப் பேணிக் காத்தல்.
- சங்க உறுப்பினர்களின் ஒழுக்க நிலை, கல்வி நிலை என்பன செம்மையுறுவதற்கேற்ற வாய்ப்புக்களை உண்டாக்குதல்.
- கவின் கலைகளின் வளர்ச்சிக்கேற்ற வழிவகைகளைச் செய்தமைத்தல்.
- நிகழ்கால சமுதாய மேம்பாட்டு, மாற்ற, எழுச்சி, வளர்ச்சி அசாத்திய சூழல் ஆகியவற்றுக்கேற்ப, தமிழர் சமூகத்திற்கு உதவுதல்.

சங்க உறுப்பினர் (தொகை 31.03.2010 அன்றுள்ளபடி)

ஆயுள் உறுப்பினர்	-	573
சாதாரண உறுப்பினர்	-	179

இக்காலப்பகுதியில் நடந்த கூட்ட விபரங்கள்

அ.	ஆட்சிக்குழுக்கூட்டங்கள்	-	11
ஆ.	விசேட ஆட்சிக்குழுக் கூட்டங்கள்	-	02
இ.	உப குழுக் கூட்டங்கள்		
	1. இலக்கியக்குழு	-	03
	2. கல்விக்குழு	-	10
	3. நூலகக்குழு	-	05
	4. உறுப்பாண்மைக்குழு	-	06
	5. நிலையமைப்புக்குழு	-	05

6. பரிசில் நிதியக்குழு	-	04
7. பதிப்புத்துறைக் குழு	-	02
8. குழுச் செயலாளர் கூட்டம்	-	01
9. ஓம்படைச் சபைக்குழு	-	01
10. உள்ளகக் கணக்காய்வுக்குழு	-	01
12. சங்க வரலாற்றுக் குழுக் கூட்டம்	-	01
13. சம்பள மீளாய்வுக்குழு	-	02

67ஆவது ஆண்டுப்பொதுக்கூட்டம்

திருமதி பத்மா சோமகாந்தன் அவர்களது தமிழ்த்தாய்வாழ்த்தைத் தொடர்ந்து தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தமது முன்னுரையை நிகழ்த்தினார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழ் பேசும் மக்களினது கலை, பண்பாடு, கல்வி, தமிழியல் ஆய்வு முதலாம் துறைகளின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் கட்சிபேதமற்ற பண்பாட்டு நிறுவனமாகும். கடந்த ஆண்டிலே பல்வேறு சிறப்புப் பணிகள் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டன. இடம்பெயர்ந்து அவலமுற்ற மக்களின் வாழ்வாதாரங்களுக்குரிய பணிகளை மட்டுமன்றி, அங்குள்ள சிறார்களின் கல்வியை முன்னெடுப்பதற்குரிய ஆக்கபூர்வமான பங்களிப்பையும் மேற்கொண்டது. ஆய்வரங்குகள், கலைநிகழ்ச்சிகள், நூலக விரிவாக்கம், கருத்தரங்குகள் போன்ற பல்வேறு பணிகளை அனைத்து உறுப்பினர்களதும் தளராத பங்களிப்புடன் மேற்கொள்ள முடிந்தது. அவ்வாறான பெரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புத் தந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

அடுத்து பொதுச் செயலாளர் திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களால் 67ஆவது ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவித்தல் வாசிக்கப்பட்டது. அடுத்து 2008 - 2009 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிக்கை பொதுச்செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கை சரியென திரு.பொ.சந்திரலிங்கம் முன்மொழிய திரு.ப.க.மகாதேவா வழிமொழிய சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிறைவேற்றுக்குழுவின் அறிக்கை பொதுச் செயலாளர் திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கை சரியென திரு.பொ.சந்திரலிங்கம் முன்மொழிய திருமதி பத்மா சோமகாந்தன் வழிமொழிய சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

31.12.2008இல் முடிவடைந்த ஆண்டுக்குரிய பரிசோதிக்கப்பட்ட கணக்கறிக்கை நிதிச் செயலாளர் திரு.சி.சிவலோகநாதன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. கணக்கறிக்கை சரியென திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் முன்மொழிய திரு.த.சிவஞானரஞ்சன் வழிமொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடுத்து தேர்தலை நடாத்தும் முகமாக தேர்தல் அதிகாரிகள் தெரிவு நடைபெற்றது. திருவாளர்கள் வே.கந்தசாமி, கே.பரமலிங்கம், நா.பஞ்சாட்சரம் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து, வாக்களிப்பு சங்க அலுவலர்கள் உதவியுடன் ஆரம்பமாகியது.

தலைவராக பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களும், நிலையமைப்புக் குழுச் செயலாளராக திரு.மா.தேவராசா அவர்களும் ஏகமனதாகத் தெரிவாகினர்.

தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் ஏனைய தெரிவுகள் இடம்பெற்றன.

துணைத் தலைவர் பதவிக்கு

பேராசிரியர் சபா ஜெயராசா, திரு.மு.கதிர்காமநாதன், திருமதி பத்மா சோமகாந்தன்,

திரு.ஆ.குகமூர்த்தி, திரு.க.ஞானசேகரன், திரு.ஜி.இராஜகுலேந்திரா, வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன், திரு.த.அம்பிகைபாகன், திரு.உலகநாதர் நவரத்தினம், திரு.தம்பியப்பா கோபாலகிருஸ்ணன், திரு.மு.க.மாசிலாமணி ஆகியோர் போட்டியிட்டனர்.

மேற்படி போட்டியின் முடிவில் பின்வருவோர்
பேராசிரியர் சபா ஜெயரசா, திரு.மு.கதிர்காமநாதன், வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன், திரு.ஆ.குகமூர்த்தி, திருமதி பத்மா சோமகாந்தன், திரு.ஜி.இராஜகுலேந்திரா **துணைத் தலைவர்களாகத்** தெரிவாகினர்.

பொதுச் செயலாளர் பதவிக்கு திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, திரு.தி.கணேசராசா ஆகியோர் போட்டியிட்டனர். திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் தெரிவானார். நிதிச் செயலாளர் பதவிக்கு திரு.ச.பாலேஸ்வரன், திரு.எஸ்.மனோகரன் ஆகியோர் போட்டியிட்டனர் திரு.ச.பாலேஸ்வரன் அவர்கள் தெரிவானார். துணைச் செயலாளர் பதவிக்கு திரு.எஸ்.பாஸ்க்கரா, திரு.ஜெயரட்ணம் ஜெயகாந்தன் ஆகியோர் போட்டியிட்டனர். திரு.எஸ்.பாஸ்க்கரா அவர்கள் தெரிவானார். துணைநிதிச் செயலாளர் பதவிக்கு வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன், திரு.தி.ஜெயசீலன் ஆகியோர் போட்டியிட்டனர். வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன் அவர்கள் தெரிவானார். இலக்கியக்குழுச் செயலாளர் பதவிக்கு திரு.எஸ்.எழில்வேந்தன், திரு.தம்பு சிவசுப்பிரமணியம் ஆகியோர் போட்டியிட்டனர். திரு.தம்பு சிவசுப்பிரமணியம் அவர்கள் தெரிவானார். உறுப்புரிமைச் செயலாளர் பதவிக்கு திரு.மா.சடாட்சரன், திரு.இ.சிறிஸ்கந்தராசா ஆகியோர் போட்டியிட்டனர். திரு.இ.சிறிஸ்கந்தராசா அவர்கள் தெரிவானார். கல்விக்குழுச் செயலாளர் பதவிக்கு, மு.மனோகரன், திரு.மா.கணபதிப்பிள்ளை ஆகியோர் விண்ணப்பித்திருந்தனர். இதில் திரு.மா.கணபதிப்பிள்ளை திரு.மு.மனோகரன் ஆகிய இருவருக்கும் சமமான வாக்குகள் பதிவாகின. நாணயச் சுழற்சி மூலம் திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்கள் தெரிவானார். நூலகக் குழுச் செயலாளர் பதவிக்கு திரு.தி.ஞானசேகரன், திரு.தெ.மதுசூதனன் ஆகியோர் போட்டியிட்டனர். திரு.தி.ஞானசேகரன் தெரிவானார்.

ஆட்சிக்குழு உறுப்பினர் பதவிகளுக்கு பின்வருவோர் போட்டியிட்டனர்.
திரு.த.அம்பிகைபாகன், திரு.க.இரகுபரன், திரு.பூ.க.இராசரத்தினம், திரு.ஜி.இராஜகுலேந்திரா, திரு.ச.இலகுப்பிள்ளை, திரு.உடப்பூர் வீரசொக்கன், திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், திரு.குமாரசாமி சுப்பிரமணியம், திரு.மா.சடாட்சரன், திருமதி சந்திரபவானி பரமசாமி, செல்வி. சற்சொரூபவதி நாதன், திரு.த.சிவஞானரஞ்சன், திரு.க.க. உதயகுமார், திரு.சின்னத்துரை சண்முகலிங்கம், திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா, திரு.க.சுந்தரமூர்த்தி, திரு.சுப்பிரமணியம் சந்திரலிங்கம், திரு.செல்லத்துரை மனோகரன், திரு.மா.கணபதிப்பிள்ளை , திரு.சி.கந்தசாமி, திரு.கதிரவேலு மகாதேவா, தி.சுப்பையா தேவதாசன், திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன், திரு.தம்பியப்பா கோபாலகிருஷ்ணன், திரு.தியாகராசஐயர் ஞானசேகரன், திரு.நடராஜா கணேசலிங்கம், திரு.செல்லத்துரை பாலசுப்பிரமணியம், திரு.ச.நா.தணிகாசலம்பிள்ளை, திருமதி பத்மா சோமகாந்தன், திரு.அ.பற்குணன், திரு.கே.பொன்னுத்துரை, திருமதி அ.புவனேஸ்வரி, திரு.பொன்னுத்துரை சந்திரலிங்கம், திரு.ப.க.மகாதேவா, திரு.மு.மனோகரன், திரு.க.மாசிலாமணி, திரு.இ.உருக்மணிகாந்தன், திருமதி வசந்தி தயாபரன், திரு.வல்லிபுரம் கமலேஸ்வரன், கலாநிதி வ.மகேஸ்வரன், வைத்தியகலாநிதி விக்னவேணி செல்வநாதன், திரு.வைரவப்பிள்ளை லோகநாதன், திரு.ஜெ.ஜெயகாந்தன், திரு.ஸ்ரீதயாளன் ஸ்ரீபிருந்திரன்
இவர்களுள் பின்வருவோர் தெரிவாகினர்.
செல்வி சற்சொரூபவதி நாதன், திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், திரு.ச.இலகுப்பிள்ளை, திரு.க.இரகுபரன், கலாநிதி வ.மகேஸ்வரன், திருமதி வசந்தி தயாபரன், திரு.உடப்பூர் வீரசொக்கன்,

திரு.இ.உருக்மணிகாந்தன், திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா, திரு.க.க.உதயகுமார், திரு.பொன்னுத்துரை சந்திரலிங்கம், திருமதி சந்திரபவானி பரமசாமி, திரு.டயிள்யு.எஸ்.செந்தில்நாதன், திருமதி அ.புவனேஸ்வரி, திரு.மா.சடாட்சரன், திரு.அ.பற்குணன், திரு.சி.கந்தசாமி, திரு.ப.க.மகாதேவா, திரு.த.சிவஞானரஞ்சன், திரு.க.சந்தரமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

உள்ளகக் கணக்காய்வாளர்களாக திரு.தி.கணேசராசா, திரு.சி.மாணிக்கராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
பகிரங்கக் கணக்காய்வாளராக கிருபாகரன் அன்கோ நிறுவனம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

காப்பாளராக பேராசிரியர்கா.சிவத்தம்பி அவர்களும், துணைக்காப்பாளர்களாக பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம், புலவர்.த.கனகரத்தினம், கலாநிதி க.நாகேஸ்வரன், திரு.பெரியதம்பிப்பிள்ளை விஜயரத்தினம், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் முன்மொழியப்பட்டார்கள். சபை ஏகமானதாக ஏற்றுக் கொண்டது.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தெரிவு இடம்பெற்றது
நம்பிக்கைப் பெறுப்பாளர் சபைத் தலைவராக திரு.இ.நமசிவாயம் அவர்களின் பெயர் முன்மொழியப்பட்டது உறுப்பினர்களாக திரு.அ.திருநாவுக்கரசு, திரு.ஏ.எம்.சுப்பிரமணியம், திரு.ஜெ.திருச்சந்திரன், திரு.என்.வீரசிங்கம் ஆகியோர் முன்மொழியப்பட்டார்கள். சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

சபையோர் குறிப்புரையின்போது சங்க வளர்ச்சிக்கான ஆலோசனைகளைப் பல அங்கத்தவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நிறைவாகப் பொதுச் செயலாளர் திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் கூட்டத்திற்குச் சமுகமளித்த அங்கத்தவர்கள், மற்றும் தேர்தல்களை சிறப்பாக நடாத்தி உதவிய சங்க உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

திருமதி பத்மா சோமகாந்தனின் தமிழ் வாழ்த்துடன் கூட்டம் மாலை 3.30 மணியளவில் இனிதே நிறைவெய்தியது.

குழுக்களின் செயற்பாடுகள்

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை:~
சங்கப் பணிகள் சிறக்க இச்சபை தனது வழமையான பணிகளையாற்றி வருகிறது. இதன் தலைவராக திரு.இ.நமசிவாயம் அவர்களும், செயலாளராக திரு.ஜெ.திருச்சந்திரன் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

உறுப்பாண்மைக்குழு:~
திரு.இ.சிறிஸ்கந்தராசா அவர்களைச் செயலாளராகக் கொண்டு இயங்கும் இக்குழு, இம்முறை மிகவும் சிறந்த முறையில் இயங்கியமையால் இக்காலப்பகுதியில் 69 சாதாரண உறுப்பினர்களும் 46 ஆயுள் உறுப்பினர்களும் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டுள்ளனர். (இணைப்பு - 02, 03). உறுப்புரிமைக்குழு அங்கத்தவர்களான திரு.ப.க.மகாதேவா, திரு.இ.உருக்மணிகாந்தன் ஆகியோரின் முயற்சியினால் சகல அங்கத்தவர்களுக்குமான அங்கத்துவ அட்டைகள் வழங்கப்பட்டுவருகின்றன.

நூலகக்குழு:~

நூலகம்

இலங்கையில் உள்ள பிரதான தமிழ் நூலகங்களுள் தலையாயது தமிழ்ச்சங்க நூலகம். தமிழ் மொழி, இலக்கியம் சார்ந்த மிகவும் அரியநூல்களை எமது நூலகம் கொண்டுள்ளது. இலங்கை நூல்கள் பகுதி என்பது இங்கு மிகவும் முக்கியமானது. இலங்கை இலக்கியம், வரலாறு தொடர்பான அரிய நூல்களைக் கொண்ட பகுதியாக இது விளங்குகின்றது. மேலும், பருவஇதழ் பகுதி, உடனுதவும் பிரிவு, இரவல் வழங்கும் பிரிவு, மாணவர் வாசிப்புப் பிரிவு, சட்ட நூலகப் பிரிவு, சிறுவர் பகுதி எனப் பல தொகுதிகளையுடைய நூலகமாக இது விளங்குகின்றது. தமிழ்ச்சங்கத்துக்குப் பெருமை சேர்க்கும் அங்கத்தில் முதன்மையானது நூலகம் ஆகும். நூலகச் செயலாளராக வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்.

அ. நூல்கொள்வனவு

நூலகத்திற்கென ஏற்கனவே பெறப்பட்ட நூல்களுக்கான கொடுப்பனவைச் சரி செய்வதற்காக நூல்கொள்வனவு மட்டுப்படுத்தப்பட்டு, கொடுப்பனவுகள் சீர் செய்யப்பட்டன. பருவ இதழ்கள், முக்கியமான நூல்கள் போன்றவை வழமைபோல கொள்வனவு செய்யப்பட்டன.

வாசகர் வட்டத்தைப் பெருக்கும் நோக்குடன் வாசிப்பு மாதமான செப்டெம்பர் 2008 முழுவதும் நூலக அங்கத்துவம் இல்லாதோரும் நூலகத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர்.

ஆ. நூல் விபரத்தைக் கணினிப்படுத்தல்

நூலகத்தில் உள்ள அனைத்து நூல்களையும் திரட்டிக் கணினிப்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு மூன்று உத்தியோகத்தர்களை வேலைக்கு அமர்த்தி சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

எமது நூலகத்திலுள்ள அரிய நூல்களை மின் பிரதியாக்கி இணையத்தில் கொண்டு வரும் திட்டம் "நூலகம்" நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

இ. நூல் அன்பளிப்புக்கள்

நூல் வரவேட்டில், கொள்வனவு செய்யப்பட்ட நூல்களும் அன்பளிப்புகளும் கிரமமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மொத்த நூல் வரவுகள் விபரம் வருமாறு.

கொள்வனவு	-	394
அன்பளிப்பு	-	2370

நூல்களை அன்பளிப்பாக வழங்கிய அன்பர்கள்

அன்பளிப்பு வழங்கிய அனைவரின் பெயர்களையும் இங்கு குறிப்பிடுதல் சாத்தியமற்றது. எனினும் முப்பதிற்கு மேற்பட்ட நூல்களை வழங்கியோர் பெயர்களை இங்கு அவசியம் குறிப்பிட வேண்டும். எதிர்காலத்திலும் அவர்களது உதவிகளை நாடி நிற்கிறோம்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன்	300
திரு.க.குமரன்	229
திரு.எஸ்.வீ.ஆர்.வேதநாயகம்	188
திரு.க.மு.தர்மராஜா	86
பேராசிரியர் கா.சிவத்தம்பி	74
திரு.ஏ.கணேஷலிங்கம்	69
திரு.கேசவன்	52
திரு.எஸ்.மயூரன்	45
திரு.சதபூ.பத்மசீலன்	38
திரு.மு.சாயபு மரைக்காயர்	33
திரு.வை.மகேந்திரநாதன்	32
திரு.சி.சிவரம்யா	30
பேராசிரியர் சபா ஜெயராசா	30

தேசிய நூலக ஆவணமாக்கல் சபையினர் பருவ இதழ் சுட்டியாக்கம் செய்வதற்கு எமது நூலகத்தின் பருவ இதழ் பகுதியை பயன்படுத்தி வருகின்றனர்.

தேசிய கல்வி நிறுவனத்தின் தமிழ் மொழிப் பிரிவினர் தமிழ்ப்பாடத்திட்டத்திற்கான செயலமர்வுகளுக்கான முன் முயற்சிகளுக்கு எமது நூலகத்தை வளநிலையமாகப் பயன்படுத்துகின்றனர்.

மேலதிகமாக இருந்த நூல்கள் நூலகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு வேறு நூலகங்களுக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்டன.

நூலகத்தின் பயன்பாட்டுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் விபரம்

புத்தக அலுமாரிகள்	- 4
சுழல் கதிரை	- 3
அலுவலக மேசை	- 1
கணினி மேசை	- 1

அன்பளிப்பு

அண்ணா கோப்பி உரிமையாளர் திரு.பொ.சு.நடராஜா அவர்கள் நூலகத்திற்கு கணினி, பிரிண்டர், ஸ்கானர் ஆகியனவற்றையும் அன்பளிப்பாக தந்துதவியுள்ளார்.

ஏடு தொடக்குதல்

ஒவ்வவொரு வருடமும் விஜய தசமி அன்று காலையில் குழுந்தைகளுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வு நூலகத்தில் நடைபெறுதல் வழக்கம். கடந்த ஆண்டு கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன், பேராசிரியர் சபா ஜெயராசா, கலாபூசணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை, பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு இந்நிகழ்வை வெகு சிறப்பாக நடாத்தி வைத்தனர்.

கல்விக்குழு:~

கல்விக்குழுச் செயற்பாடுகள் குழுச் செயலாளர் திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்களினால் திறம்பட முன்னெடுக்கப்பட்டன.

அ. திருக்குறள் தொடர் சொற்பொழிவு

கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களால் நிகழ்த்தப்பெற்ற இச்சொற்பொழிவு, 26.12.2009 சனிக்கிழமை தொடக்கம் 2.1.2010 சனிக்கிழமை வரை தினமும் 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

26.12.2009 சனிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களின் தலைமையில் "ஒரு தர்மம்" என்ற விடயம் பற்றி சொற்பொழிவு நடைபெற்றது. தேசமானிய, தேசபந்து திரு.ஏ.எஸ்.பூபாலசிங்கம் (ஜே.பி) அவர்கள் துணைவியார் சகிதம் மங்கள விளக்கேற்றிச் சிறப்பித்தார்கள். தமிழ்வாழ்த்தினை செல்வி பிரசாந்தி இராஜ்குமார், செல்வி பார்க்கவி கபிலதாஸ் ஆகியோர் இசைத்தனர். தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க கல்விக்குழுச் செயலாளர் திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்கள் நிகழ்த்தினார்.

27.12.2009 ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களின் தலைமையில் "ஒரு நூல்" என்ற விடயம் பற்றி சொற்பொழிவு நடைபெற்றது. உலக சைவப் பேரவை இலங்கைக் கிளையின் உபதலைவர் திரு.க.தம்பிராஜா அவர்கள் துணைவியார் சகிதம் மங்கள விளக்கேற்றி சிறப்பித்தார்கள். தமிழ்வாழ்த்தினை செல்வி கீர்த்தனா சச்சிதானந்தன், செல்வி கீர்த்தனா மதிவதனன் ஆகியோர் இசைத்தார்கள். தொடக்கவுரையை திருமதி ஜெயந்தி விநோதன் அவர்கள் நிகழ்த்தினார்.

28.12.2009 திங்கட்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் அவர்களின் தலைமையில் "ஒரு குறள்" என்ற விடயம் பற்றிய சொற்பொழிவு நடைபெற்றது. கப்பல் பொறியியலாளர் திரு.மு.பாலச்சந்திரன் அவர்கள் துணைவியார் சகிதம் மங்கள விளக்கேற்றி சிறப்பித்தார். தமிழ்வாழ்த்தினை திருமதி சீதாலஷ்மி வசீகரன் அவர்கள் இசைத்தார். தொடக்கவுரையை கலாசார சமய அலுவல்கள் அமைச்சு முன்னாள் மேலதிக செயலாளர் திரு.எஸ்.எச்.ஜமீல் அவர்கள் நிகழ்த்தினார்.

29.12.2009 செவ்வாய்க்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் திருமதி பத்மா சோமகாந்தன் அவர்களின் தலைமையில் "ஒரு பால்" என்ற விடயம் பற்றி சொற்பொழிவு இடம்பெற்றது. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கும் அண்ணா தொழிலக உரிமையாளர் திரு.சு.பொ.நடராஜா அவர்கள் மங்கள விளக்கேற்றிச் சிறப்பித்தார். தமிழ்வாழ்த்தினை செல்வி ஸ்ரீசாரதா சுந்தரேசன் அவர்கள் இசைத்தார்கள். தொடக்கவுரையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் திரு.வீ.ஏ.திருஞானசுந்தரம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

30.12.2009 புதன்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் செல்வி சற்சொரூபவதி நாதன் அவர்களின் தலைமையில் "ஓர் அறம்" என்ற விடயம் பற்றி சொற்பொழிவு நடைபெற்றது. லக்ஷ்மி பவான் உரிமையாளரும் நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்க இணைப்பாளருமான திருஅம்பலவாணர் சர்வானந்தராஜா அவர்கள் மங்கள விளக்கேற்றிச் சிறப்பித்தார். தமிழ்வாழ்த்தினை செல்வி சௌதாமினி மோகனசுந்தரம் அவர்கள் இசைத்தார். தொடக்கவுரையை வவுனியா, மேல்நீதிமன்ற நீதிபதி திரு.ஜெ.விஸ்வநாதன் அவர்கள் நிகழ்த்தினார்.

31.12.2009 வியாழக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் திரு.ஆ.குகமூர்த்தி அவர்களின் தலைமையில் "ஓர் இயல்" என்ற விடயம் பற்றி சொற்பொழிவு நடைபெற்றது. வைத்தியகலாநிதி ச.சிவசுப்பிரமணியம் அவர்கள் துணைவியார் சகிதம் மங்கள விளக்கேற்றி சிறப்பித்தார்கள். தமிழ்வாழ்த்தினை செல்வி றனோசா சந்திரசேகரம், செல்வி நாராஜினி சுதாகரன், செல்வி டிக்சித்தா பாஸ்கரன், செல்வி ஜர்சனா அருந்தவநாதன் ஆகியோர் இசைத்தார்கள். தொடக்கவுரையை திருகோணமலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா அவர்கள் நிகழ்த்தினார்.

01.01.2010. வெள்ளிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் திரு.ஜி.இராஜகுலேந்திரா அவர்களின் தலைமையில் "ஓர் அதிகாரம்" என்ற விடயம் பற்றி சொற்பொழிவு நடைபெற்றது. நீர்கொழும்பு இந்து வர்த்தக சங்க தலைவர், திரு.வேலு சந்திரசேகரம் அவர்கள் துணைவியார் சகிதம் மங்கள விளக்கேற்றி சிறப்பித்தார்கள். தமிழ்வாழ்த்தினை செல்வி நிரோஜினி மணிமாறன், செல்வி சிலோஜினி மணிமாறன், செல்வி கலைவாணி துரைசாமி, செல்வி சஞ்சீவனி பிரபாகர் ஆகியோர் இசைத்தார்கள். தொடக்கவுரையை முகத்துவாரம் இந்துக் கல்லூரி அதிபர் செல்வி பு.யோ.முருகேசு அவர்கள் நிகழ்த்தினார்.

02.01.2010. சனிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களின் தலைமையில் "ஓர் உரை" என்ற விடயம் பற்றி சொற்பொழிவு இடம்பெற்றது. திரு.எஸ்.கணபதிப்பிள்ளை அவர்கள் துணைவியார் சகிதம் மங்கள விளக்கேற்றி சிறப்பித்தார்கள். தமிழ்வாழ்த்தினை திருமதி ரஜனி சந்திரலிங்கம் அவர்கள் இசைத்தார். தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.க.இரகுபரன் அவர்கள் நிகழ்த்தினார். நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நிகழ்த்தினார். நிகழ்சிகளை ஆட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.ப.க.மகாதேவா, திருமதி வசந்தி தயாபரன், திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா ஆகியோர் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்கள். கண்கவரும் அலங்காரங்களுடனும் மண்டபம் நிறைந்த பார்வையாளர்களுடனும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இறுதி நாள் நிகழ்வின் போது விசேட விருந்தினர்களுக்கு இராப்போசனமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்கு லஷ்மி பவான் உரிமையாளர் திரு.அ.சர்வானந்தராஜா, கப்பல்துறை பொறியியலாளர் திரு.மு.பாலச்சந்திரன், திரு.எஸ்.கணபதிப்பிள்ளை, நீர்கொழும்பு திரு.வேலு சந்திரசேகரம், வைத்தியகலாநிதி த.சிவசுப்பிரமணியம், திரு.பெரியதம்பிப்பிள்ளை விஜயரத்தினம், திரு.ஏ.எஸ்.பூபாலசிங்கம், திருமதி ஜெயந்தி விநோதன், நியூ ரத்னமகால் ஜுவலறி உரிமையாளர், திரு.பொ.ஜெயராமன், திருமதி லீ.மோகனசுந்தரம், திரு.க.தமபிராசா ஆகியோர் அன்பளிப்பு தந்துதவியுள்ளார்கள்.

அ. யாழ் நூல் ஆய்வரங்கு

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் **"யாழ்நூல்"** ஆய்வரங்கு 21.02.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் **பேராசிரியர் சோ.சந்திரசேகரன்** அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. காலை 8.45 மணிக்கு இசை நடன கண்காட்சியை கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர், **திரு.டி.எம்.சுவாமிநாதன்** அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார். சொர்ணம் குரூப் ஒப் கம்பனி அதிபர் **திரு.முத்துபிள்ளை விஸ்வநாதன்** அவர்களும் **துணைவியாரும்** மங்கல விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர். தமிழ்த் தாய் வாழ்த்தினை சங்கீத கலாவித்தகர் **வைத்திலிங்கம் கணேசலிங்கம்** இசைத்தார். வரவேற்புரையை கொழும்புத் தமிழ்ச் சங்க கல்விக்குழுச் செயலாளர் **திரு.மா.கணபதிப்பிள்ளை** அவர்களும், தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் **பேராசிரியர் சபா ஜெயராசா** அவர்களும் நிகழ்த்தினார்கள். **"இயற்பியல் நோக்கில் யாழ்நூல்"** என்னும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக பௌதீகவியல்துறை முதுநிலை விரிவுரையாளர் **கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்** அவர்களும், **"தமிழியல் நோக்கில் யாழ்நூல்"** என்னும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் **கலாநிதி வ.மகேஸ்வரன்** அவர்களும், **"இசைஇயல் நோக்கில் யாழ்நூல்"** என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறை தலைவர் பேராசிரியர் **முனைவர் பிரமீளா குருமூர்த்தி** அவர்களும் ஆய்வுரைகளை நிகழ்த்தினார்கள். நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் **திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி** அவர்கள் நிகழ்த்தினார். அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்பட்டது.

மாலை 6.00 மணிக்கு **"இசை அரங்கம்"** நிகழ்வு இடம்பெற்றது **திரு.ஆர்.மயூரநாதன்** அவர்களும் **துணைவியாரும்** மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்கள் தமிழ் வாழ்த்தினை **திருமதி சொர்ணலதா பிரதாபன்** அவர்கள் இசைத்தார். **பேராசிரியர் சோ.சந்திரசேகரன்** அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் **திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன்** தொடக்கவுரையை நிகழ்த்தினார் **முனைவர் பிரமீளா குருமூர்த்தி** இசை விருந்தளித்தார் அணிசேர் கலைஞர்களாக **திருமதி சுவர்ணாங்கி சுகர்தன்** (வயலின்) **திரு.ஏ.ஜி.சுவாமிநாதன் சர்மா** (மிருதங்கம்) திரு.டானியல் **வரதராஜன்** (கஞ்சிரா) **திரு.வி.பிரபா** (முகர்சிங்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நன்றியுரையை பொதுச் செயலாளர் **திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி** நிகழ்த்தினார். சங்க வாழ்த்திசையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவெய்தின.

"யாழ்" நூல் கண்காட்சி

கல்விக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற யாழ் நூல் ஆய்வரங்கு நிகழ்வில் யாழ்நூல்கள், இசை, நாடக நூல்கள், இசைக்கருவிகள் ஆகியன விநோதன் மண்டபத்தில் வைக்கப்பட்டு முழு நாள் கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியை திரு.டி.எம்.சுவாமிநாதன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.

இந்நிகழ்விற்கு திரு.எம்.விஸ்வநாதன், திரு.ஜி.கே.இன்பஸ், திரு.எஸ்.கே.சோதிலிங்கம் ஆகியோர் அன்பளிப்பு தந்துதவினார்கள். விமான நிலையத்திற்குச் சென்று வருவதற்கான போக்குவரத்துச் செலவை திரு.க.ஞானசேகரன் அவர்கள் ஒழுங்கு செய்து உதவினார். யாழ்நூல் ஆய்வரங்கு விழாவுக்கான அழைப்பிதழை திரு.க.க.உதயகுமார் அவர்கள் பதிப்பித்து வழங்கினார்.

இ.விவாதக்களம்

12.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை விவாதக்களம்

நடைபெற்றது. மேல் மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலை மட்டங்களுக்கிடையே நடைபெற்ற விவாத நிகழ்வில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி இராமனாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு பாத்திமா முஸ்லீம் மகளிர் கல்லூரி, கொழும்பு புனித ஆசிர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி, பரி.தோமாவின் கல்லூரி கல்கிசை, கொழும்பு இந்துக் கல்லூரி - இரத்மலானை, நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி, கொழும்பு புனித பேதுரு கல்லூரி ஆகிய பாடசாலைகள் பங்கு பற்றின. இந்நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்கு ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.க.க.உதயகுமார் அவர்களும், விவாதக்களத்திற்கு நடுவர்களாக வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன், திருமதி பத்மா சோமகாந்தன், திருமதி வசந்தி தயாபரன், துணைவியூர் கேசவன், செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி அ.புவனேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஈ. மகளிர் தினம்

14.03.2010 அன்று சர்வதேச மகளிர் தினத்தையொட்டிய நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்கதுணைத் தலைவர் திருமதி பத்மா சோமகாந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக தேசபந்து, தேசகீர்த்தி, லங்காமனிக் கௌசல்யா கோவிந்தபிள்ளை அவர்கள் கலந்து உரையாற்றி சிறப்பித்தார்.

உ. ஆசிரியர் கல்விச் செயலமர்வு

கொழும்புக் கல்விவலய ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி புனிதா மைக்மேல் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் **"மகிழ்ச்சிகரமான கற்பித்தல் உத்திகள்"** என்ற தலைப்பில் கொழும்பு மாவட்ட ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான செயல்மலர்வுக் கருத்தரங்குகள் 20.03.2010, 21.03.2010, 27.03.2010, 28.03.2010 ஆகிய நாட்களில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. இச் செயலமர்வில் ஆசிரியர்களுக்கான குழுச் செயற்பாடுகள், கருத்தரங்குகள் என்பன இடம்பெற்றன. தரம் 2, 3, 4, 5 ஆகிய பிரிவுகளுக்கான வழிகாட்டல் கையேடுகளும் வழங்கப்பட்டன.

ஊ. க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை

க.பொ.த.உயர்தர மாணவர்களுக்குரிய சகல பாடங்களுக்குமான முன்னோடிப் பரீட்சை 10.06.2010 தொடக்கம் 24.06.2010 திகதி வரை பாடசாலைகளிலும், சங்க மண்டபத்திலும் நடை பெற்றது ஏறத்தாழ 300 மாணவர்கள் பரீட்சையில் பங்குபற்றினார்கள்.

எ. க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு

1. 25.06.2010 தொடக்கம் 27.06.2010 வரை க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான விஞ்ஞான, கணித, வர்த்தக, கலைப் பிரிவு பாடங்களுக்கான முதலாவது கருத்தரங்குகள் சங்க மண்டபங்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

2. க.பொ.த.உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கான இராண்டாவது கருத்தரங்குகள் 15.07.2010, 16.07.2010 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த பிரபல ஆசிரியர்களால் சங்க மண்டபத்தில் கருத்தரங்கு நடாத்தப்பட்டன.

3. 23.07.2010, 24.07.2010, 25.07.2010 ஆகிய தினங்களில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் வவுனியா நலன்புரிமுகாமிலிருந்து 2010ஆம் ஆண்டுக்கான க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நடைபெற்றன. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிதிச் செயலாளர் திரு.ச.பாலேஸ்வரன் அவர்கள் கல்வி அமைச்சின் ஊடாக போக்குவரத்து ஒழுங்குகளை செய்து தந்து உதவினார்

அனைத்துப் பாடங்களுக்குமான கருத்தரங்குகளை நடாத்திய வளவாளர்கள் விபரம்

கொழும்பு றோயல் கல்லூரி

திரு.எஸ்.கே.ஜெயக்குமார் பௌதீகவியல்

திரு.ஆர்.பரமேஸ்வரன்	இரசாயனவியல்
திரு.ஏ.சரவணன்	கணக்கியல்
திரு.எஸ்.கமல்ரூபன	பொருளியல்
திரு.வி.சாந்தகுமார்	தமிழ்
திரு.எஸ்.கே.இராகவராஜன்	விவசாயம்
திரு.எஸ்.மனோகரன்	உயிரியல்
திரு.மா.கணபதிப்பிள்ளை	அரசியல் மூலத்துவங்கள்

கொழும்பு இந்துக்கல்லூரி

திரு.ஈஸ்வரதாஸ்	உயிரியல்
திரு.நித்தியானந்தன்	கணிதம்

கொழும்பு இராமனாதன் இந்துக்கல்லூரி

திரு.மயூரன்	வணிகக்கல்வி

வெஸ்லிக் கல்லூரி

திரு.மகேந்திரராசா	அளவையியலும் விஞ்ஞானமும்

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தால் தயாரிக்கப்பட்ட பதினொரு பாடங்களினதும் வினாத்தாள்களும் விடைத்தாள்களும், கொழும்பு றோயல் கல்லூரி, கொழும்பு இந்துக்கல்லூரி ஆகிய கல்லூரிகளால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களும் விடைத்தாள்களும் மாணவர்களின் கருத்தரங்கில் துணைச் சாதனங்களாக வழங்கப்பட்டன.

கல்விக்குழுவின் சகல நடவடிக்கைகளுக்கும் சங்கத்தலைவர், பொதுச் செயலாளர் துணைத் தலைவர்கள், கல்விக்குழு உறுப்பினர்கள், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் எல்லோரும் உதவினார்கள். அத்துடன் பல பாடசாலை ஆசிரியர்களும் க.பொ.த.உயர்தர பாடங்களுக்கான வினாத்தாள்களையும், விடைத்தாள்களையும் தயாரித்துதவினார்கள். கொழும்பு றோயல் கல்லூரி, சைவமங்கையர் கழக ஆசிரியர்களுக்கும் கருத்தரங்கு வளவாளர்களாக கலந்து கொண்ட இந்துக்கல்லூரி, விபுலானந்தக்கல்லூரி, கொழும்பு இரமநாதன் கல்லூரி, ஆசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். க.பொ.த உயர்தர வகுப்பு வினாத்தாள்களை கணினி எழுத்துருவாக்கம் செய்ய றோயல் கல்லூரியைச் சேர்ந்த செல்விகள் இ.விஜிதா, கு.சுபத்திரா ஆகியோர் உதவினர் தமிழ்ச்சங்க பணிமனையில் பல்வேறு கடமைகளின் மத்தியிலும் கல்விக்குழுச் செயற்பாடுகளுக்கு மனமுவந்து உதவிய செல்விகள் கே.ஹேமலதா, எஸ்.சத்தியஜோதி ஆகியோருக்கும், தமிழ்ச் சங்க நூலகத்தில் பணிபுரியும் நூலகர் உட்பட அங்கு பணியாற்றும் சகல உறுப்பினர்களுக்கும், தமிழ்ச்சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திரு.ஆர்.சிவராஜா அவர்கட்கும் எங்கள் பணிகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு அளித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை திறம்பட நடைபெறுவதற்கு பல வழிகளிலும் உதவிகள், ஒத்துழைப்புகள் புரிந்த சங்க அலுவலர்கள் உத்தியோகத்தர்கள், நூலக உத்தியோகத்தர்கள் உட்பட சகல அலுவலக உதவியாளர்கள், நூலக உதவியாளர்கள் ஏனைய பணியாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறவேண்டும்.

ஐ. அறிவோர் ஒன்று கூடல்

வாரந்தோறும் புதன் கிழமைகளில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. புதிய அறிஞர்கள் பலர் பங்குபற்றி உரையாற்றினார்கள். (இணைப்பு - 5)

இலக்கியக் குழு:-

இலக்கியக்குழுச் செயலாளர் திரு.தம்பு சிவசுப்பிரமணியம் அவர்களால் இலக்கியக் குழுச் செயற்பாடுகள் செயலபடுத்தப்பட்டன. தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோள்களை முன்னெடுக்கும் முகமாக, இலக்கியக்குழு தனது பணிகளைத் திட்டமிட்டது. இந்தவகையில், இலக்கியக்களம், அற்றைத்திங்கள், நினைவுப் பேருரைகள், பொங்கல் விழா, மற்றும் தமிழக எழுத்தாளர் சந்திப்பு போன்ற நிகழ்வுகள் இக்குழுவின் சிறப்பான பணிகளாக இவ்வாண்டில் அமைந்திருந்தன. இலக்கியக்குழுச் செயலாளர் சங்கக் கூட்டங்களுக்கு தொடர்ந்து சமூகம் தாரதபடியால் இலக்கியக்குழுப் பணிகளை சங்கப் பொதுச்செயலாளர் திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களினால் முன்னெடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

அ. இலக்கியக்களம்

இந்நிகழ்வானது வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை ஆறுமணி தொடக்கம் ஏழரை மணி வரை நடைபெறுகிறது. வாசிப்புக் கலாசாரத்தை விருத்தி செய்தல், கலை இலக்கிய இரசனையை வளர்த்தல், இலைமறைகாயாக இருக்கும் ஆளுமைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவரல், சபையோரை பார்வையாளர் நிலைக்கும் மேலாக பங்கேற்பாளர் என்ற தரத்துக்கு உயர்த்துதல், கலந்துரையாடல்களை ஊக்குவித்தல் என்பன இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களாகும். பெரியோர்கள் மாத்திரமன்றி பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரும் நிகழ்வுகளில் பங்குபற்றி சிறப்பித்தார்கள்.

(இணைப்பு -06)

ஆ. அற்றைத் திங்கள்

தமிழின் மூத்த படைப்பாளிகளும் கலைஞர்களும், முக்கிய துறைசார்ந்தவர்களும், தாங்கள் பிறந்து வளர்ந்த பண்பாட்டுச் சூழல், தொடக்ககாலப் படைப்பு முயற்சிகள், தம்மைப் பாதித்த இலக்கிய நட்புகள், தமது கலைத்தேடல்கள், தாம் படித்த நூல்கள் ஆகியவற்றைப் பற்றி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வாக, மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமைகளில் இது நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி, பல்துறைசார் ஆளுமைகளது அறிவுத் தேட்டத்தினையும், அனுபவங்களையும் ஏனையோர் உள்வாங்கவும், ஆளுமைகளுடன் கலந்துரையாடித் தெளிவு பெறவும் ஓர் அரிய வாய்ப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்நியழ்ச்சியில் கொழும்புத் தமிழ்ச்சங்க தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் கலாசூரி ஆ.சிவநேசச்செல்வன், கலாபூஷணம் லீலாம்பிகை செல்வராஜா, மலையக எழுத்தாளர் கலாபூஷணம் மு.சிவலிங்கம், கலாபூஷணம் சு.துரைசிங்கம், கவிஞர் ஏ.இக்பால், சைவப்புலவர் சு.செல்லத்துரை, மூத்த எழுத்தாளர் கே.ஆர்.டேவிட், கவிஞர் கந்தவனம், கவிஞர் திக்குவல்லை கமால், கலாபூசணம் கே.சண்முகம்பிள்ளை. கவிஞர் மு.பொன்னம்பலம், கலைஞர் கலைச்செல்வன், பேராசிரியர் மா.செ.மூக்கையன் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இ. பொங்கல் விழா

இவ்விழா சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தலைமையில் காலையில் சூரியனுக்கு பொங்கலிட்டு கொண்டாடப்பட்டது. ஆண்டுதோறும் தமிழ்ச் சங்கம் நடத்தும் பொங்கல் விழா, இம்முறை 14.01.2010 வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது. விழாவுக்கு சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தலைமை தாங்கினார். வரவேற்புரையை ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.க.சுந்தரமூர்த்தி வழங்கினார். திவ்யா சிவநேசனின் அபிநயஷேத்திரா நாட்டியப் பள்ளி மாணவிகளின் "கிராமத்துச் சாரல்" நடன ஆற்றுகை நிகழ்வு இடம்பெற்றது.

இவ்விழாவில் சிறப்பம்சமாக **"இச்சை கொண்ட பொருளெல்லாம்"** எனும் கவியரங்கு இடம்பெற்றது கவிஞர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்கள் தலைமை தாங்க, கவிஞர்கள் ந.காண்டீபன் மட்டுவில் ஞானக்குமரன், இரா. எழில்மொழி, லுணுகலை சிறி, இரா.சடாகோபன், சா.அன்புவதனி ஆகியோர் கவிதை மழை பொழிந்தார்கள். நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.ப.க.மகாதேவா அவர்கள் வழங்கினார்.

ச. வாக்கேயகாரர் வரிசையில்.....

வாக்கேயகாரர் நிகழ்வு, தமிழிசை மரபில் என்ற தலைப்புக்களில் இந்நிகழ்வுகள் பக்கவாத்தியங்கள் சகிதம சிறப்பாக மாதாந்தம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. பேராசிரியர் சபா ஜெயராசா, கலாநிதி மீரா வில்லராயர், திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன் ஆகியோரின் ஆலோசனைகள் பெறப்பட்டு மாதாந்தம் வெள்ளிக்கிழமையில் நடைபெற்று வருகின்றன. (இணைப்பு /)

உ. ஓலை

இக் காலப்பகுதியில் இலக்கியக் குழுவினால் ஓலை 50, ஓலை 51 வெளியிடப் பெற்றன. ஓலை 51 கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் தமிழ்வேள் இ.க.கந்தசுவாமி அவர்களின் சிறப்பிதழாக வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழ்கள் இலக்கியக்குழுச் செயலாளர் திரு.தம்பு சிவசுப்பிரமணியம், திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் மற்றும் இலக்கியக்குழுவின் உறுப்பினர்கள் உதவியுடன் வெளியிடப்பட்டன.

ஊ. நிறுவன நாள் விழா

2010 ஆம் ஆண்டுக்கான நிறுவன நாள் விழா 21.03.2010 ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சங்கச் சான்றோர் விருது தினக்குரல் நிறுவுனர் திரு.எஸ்.பி.சாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ்வாழ்த்தினை செல்வன் ப.கோகுல், செல்வன் எஸ்.மிதுஷன்ஹரி ஆகியோர் இசைத்தார்கள். தொடக்கவுரையை பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களும், சிறப்புரையை ''தமிழரின் பொருளாதாரம்'' என்னும் தலைப்பில் கொழும்புப் பல்கலைக்கழக பொருளியற் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி அவர்களும் நிகழ்த்தினார்கள். நாட்டியக் கலைமணி திருமதி த.விமலச்சந்திரனின் நர்த்தன நிர்ணயா மாணவிகளின் ஆடல் அரங்கமும் நடைபெற்றது. நன்றியுரையை ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நிகழ்த்தினார்.

எ. தீபத்திருநாள் சிறப்புப் பட்டிமன்றம்

17.10.2009 சனிக்கிழமை நடைபெற்ற தீபத்திருநாள் சிறப்புப் பட்டிமன்றம் **'அநுபவக் கல்வியா', 'புத்தகக் கல்வியா'** ஒரு மனிதனைப் பூரணத்துவமாக்குகின்றது'' என்னும் தலைப்பில் நடைபெற்றது தொடக்கவுரையை இலக்கியக்குழுச் செயலாளர் திரு.தம்பு சிவசுப்பிரமணியம் அவர்கள், நிகழ்த்தினார். பட்டிமன்றத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழச் சட்டத்துறை மாணவர்கள் செல்வன் க.சுகாஷ், செல்வன் வி.மணிவண்ணன், செல்வி எஸ்.சாருஷா ஆகியோரும் கொழும்புக் றோயல் கல்லூரி மாணவர்கள் செல்வன் கு.அசோக்பரன், செல்வன் சு.விசாகன், செல்வன் த.கபிலன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள். பட்டிமன்ற நீதிபதியாக திரு.வே.தேவசேனாதிபதி (L.L.B) அவர்கள் கலந்து சிறப்பித்தார். நன்றியுரையை துணைச் செயலாளர் திரு.எஸ்.பாஸ்க்கரா அவர்கள் நிகழ்த்தினார்.

ஏ. இணையத்தள இணைப்பு

உதவி முகாமைத்துவ உத்தியோகத்தரான செல்வி ஹேமலதா கனகலிங்கம் அவர்கள் இணையத்தள வேலையை முன்னெடுத்து வருகின்றார். இவ்வேலை சிறப்பாக நடைபெறுவதற்கு திரு.பா.வசந்தன் உதவிபுரிந்து வருகின்றார். இணையத்தளத்தில் வார, மாத நிகழ்வுகள், சங்கச் செய்திகள், சங்கச் செயற்பாடுகள் என்பன வெளியிடப்பட்டு வருகின்றன.

ஐ. செய்தி மடல்

இவ்வாண்டுக்கான சங்கத்தின் முதலாவது செய்திமடல் திரு.மு.கதிர்காமநாதன் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்டது. தொடர்ந்து திரு.ப.க.மகாதேவா அவர்களினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றது. இச்செய்திமடலில், வாரம்தோறும் நடைபெறும் அறிவோர் ஒன்றுகூடல், இலக்கியக்களம், சிறுவர்களுக்கான கதைசொல்லுதல் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளும் மாதந்தோறும் நடைபெறும் அற்றைத்திங்கள், வாக்கேயக்கார வரிசையில், ஆரோக்கிய வாழ்வுக் கருத்தரங்கு போன்ற விசேட நிகழ்வுகள் பற்றிய செய்திகளும் படங்களுடன் விரிவாக வெளியிடப்பட்டு வருகின்றன. செய்தி மடலை கணினியில் வடிவமைக்க செல்வி சி.சத்தியஜோதி அவர்களும் அச்சுப் பதிப்புக்குரிய வேலையை திரு.தெ.சச்தியசீலன் அவர்களும், அவற்றை ஒழுங்கு படுத்தி அங்கத்தவர்களுக்கு அனுப்புவதற்கான உதவியை திருமதி சி.விமலநாதன் அவர்களும் செய்து வருகின்றனர்.

01. சொற்பொழிவு

11.01.2010 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடந்த விசேட நிகழ்வில் "மனிதம்" என்னும் தலைப்பில் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக மெய்யியல்துறை பேராசிரியர் கணபதி பாஸ்கரன் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார். வரவேற்புரையை திரு.த.இராசரத்தினம் அவர்களும் நன்றியுரையை திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களும் நிகழ்த்தினர்.

02. 31.05.2010 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு தமிழகத்தில் இருந்து வருகை தந்த எழுத்தாளர் திரு.த.அகிலன் **"தமிழகத்துக் கலை இலக்கிய அனுபவங்கள்"** என்னும் தலைப்பில் உரையாற்றினார். அந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச்சங்க துணைத்தலைவர் அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் தலைமை தாங்கினார். அறிமுகவுரையை திரு.எஸ்.எழில்வேந்தன் அவர்கள் நிகழ்த்தினார்.

03. **கவிஞர் மாவை வரோதயன் அஞ்சலி நிகழ்வு**

09.10.2009 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தமிழ்வாழ்த்தினை திருமதி ரஜனி சந்திரலிங்கம் அவர்களும், அஞ்சலி உரையை மாயெழு வேல் அமுதன், சட்டத்தரணி சோ.தேவராஜா அவர்களும் **'மாவையின் கவிதைகள்'** என்னும் பொருளில் திருமதி கமலினி செல்வராஜா, திரு.மௌ.மதுவர்மன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

04. **அமரர் ச.சரவணமுத்து அவர்களின் நினைவுப்பரவல்**

கொழும்புத தமிழ்ச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடாத்திய வானொலி மாமா முத்த சிவத்தொண்டர் அமரர் ச.சரவணமுத்து அவர்களின் நினைவுப்பரவல் 23.12.2009 புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு கொண்டாடப்பட்டது. துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் நிகழ்வுக்கு தலைமையில் தாங்கினார். திருமதி ரஜனி சந்திரலிங்கம் அவர்கள் தமிழ் வாழ்த்து இசைத்தார். நினைவுரைகளை திரு.சி.கந்தசாமி, திரு.வி.கயிலாயபிள்ளை, திரு.வீ.ஏ.திருஞானசுந்தரம், திரு.மு.கதிர்காமநாதன, திரு.நலலையா குமரகுருபரன், திரு.கந்தையா நீலகண்டன் ஆகியோர் ஆற்றினார்கள். நன்றியுரையை பொதுச் செயலாளர் திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்தினார்.

05. **பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா அவர்களின் நினைவுப் பேருரை**

14.10.2009 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ் வாழ்த்தினை செல்வி விக்சிக்கா பாஸ்கரன் அவர்கள் இசைத்தார். நினைவுரைகளை பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம், திரு.மு.பொன்னம்பலம், திரு.தெ.மதுசூதனன், திரு.த.இராசரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினார்கள். நன்றியுரையை திரு.மா.கணபதிப்பிளளை நிகழ்த்தினார்.

06. **அமரர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி அவர்களின் நினைவுப்பேருரை**

30.01.2010 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கத்தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ் வாழ்த்தினை திருமதி சொர்ணலதா பிரதாபன் அவர்கள் இசைத்தார். நினைவுப் பேருரையை பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் அவர்கள் **"இலங்கையிலே தமிழ்க் கல்வியும் ஆய்வும் - தொடர்ச்சியும் வளர்ச்சியும்"** என்னும் தலைப்பில் நிகழ்த்தினார். நன்றியுரையை திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நிகழ்த்தினார்.

07. **கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் செ.குணரெத்தினம் அவர்களின் நினைவுப்பேருரை**

10.04.2010 சனிக்கிழமை மாலை 5.30 மணி சங்கத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருமதி ரஜனி சந்திரலிங்கம் தமிழ்வாழ்த்தினை இசைத்தார். நினைவுரைகளை சமூகஜோதி ச.இலகுப்பிள்ளை, திரு.சந்தையா நீலகண்டன், திரு.என்.இராகவன், திரு.மு.கதிர்காமநாதன், திரு.ஏ.எம்.நஹியா ஆகியோர் நிகழ்த்தினார்கள். அஞ்சலிக்கவிதையை வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன் வாசித்து வழங்கினார். நன்றியுரையை திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நிகழ்த்தினார்.

08. **பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை**

07.05.2010 அன்று பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்கமும் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுக்குழுவும் இணைந்து நடாத்திய இந்நிகழ்ச்சியில் **"வித்தியின் தமிழியற் பதிவுகள்"** நூல் வெளியீடும் நடைபெற்றது. தமிழ்வாழ்த்துடன் ஆரம்பமான நிகழ்வில் வரவேற்புரையை திரு.தெ.மதுசூதனனும் வெளியீட்டுரையை பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களும் நூல் நினைவுப் பேருரையை **"உயர்தொழில் துறைக்கல்வியில் தமிழின் பயன்பாடு"** என்னும் தலைப்பில் கொழும்புப் பல்கலைக்கழச் சட்டத்துறைத் தலைவர், திரு.வி.ரி.தமிழ்மாறன் அவர்களும் உரை நிகழ்த்தினார்கள். நூலின் முதற்பிரதியை திரு.ஏ.எம்.சுப்பிரமணியம் அவர்களும் சிறப்புப்பிரதியை வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். நன்றியுரையை திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நிகழ்த்தினார். இந்நிகழ்வினை திரு.ப.க.மகாதேவா அவர்கள் தொகுத்து வழங்கினார்.

09. **திரு.கா.வைத்தீஸ்வரன் அவர்களுக்கு சிறப்பு கௌரவம்**

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் பொதுச் செயலாளர், நிதிச் செயலாளர், துணைத் தலைவர் என்று பல பதவிகளில் அமர்ந்து தமிழ்ப்பணி செய்து ஆக்கமும் ஊக்கமும் அளித்த திரு.கா.வைத்தீஸ்வரன் அவர்களைக் கௌரவிக்குமுகமாக 06.12.2009 அன்று நடைபெற்ற **சுகவாழ்க்கை பாகம் 3** நூல் வெளியீட்டு விழாவில் சங்கத்தின் சார்பில் வாழ்த்துப்பா வாசித்து வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நிலையமைப்புக்குழு:-

இக்குழுவின் செயலாளராக திரு.மா.தேவராசா சிறப்பாக செயற்பட்டு வருகின்றார். இக்குழு தனது வழமையான பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகிறது.

தமிழ்ச்சங்கக் கட்டிட முன்பக்க மண்டபத்திற்கு **தமிழவேள் இ.க.கந்தசுவாமி மண்டபம்** என்று பெயர் பொறிக்கப்பட்டது.

புதிய கட்டுமானப்பணிகள் பெரிதாக இடம் பெறாத போதும் முக்கியமான திருத்தவேலைகள் செய்யப்பட்டன. சங்கரப்பிள்ளை மண்டப நீர் ஒழுக்கு தடை செய்யப்பட்டு தகரம் போடப்பட்டுள்ளது. பத்திரிகைப் படிப்பக யன்னல்களின் அரைப்பகுதிக்கு கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. சங்கரப்பிள்ளை மண்டபத்தின் உள்பகுதியில் கொங்கிறீற் தரை திருத்தப்பட்டு கொங்கீறீற்றினாலான தரை ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சங்க வளாகத்தின் வெளிப்புறங்களிலும் தரை ஓடுகள் பதிக்கப்பட்டு வர்ணம்பூசப்பட்டுள்ளது.
சுவர்களுக்கும் வர்ணம் பூசப்பட்டதோடு தமிழவேள் இ.க.கந்தசுவாமி அவர்கள் உபயோகித்த அறை வர்ணம் பூசப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. பழுதடைந்த யன்னல்கள் திருத்தப்பட்டுள்ளன. மின்தூக்கி அமைக்கும் பணிக்கு கூடுதலான நிதி தேவைப்படுவதால் அவ்வேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மேல்மாடியில் அறைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சங்க மண்டபங்கள்

சங்கரப்பிள்ளை மண்டபம், விநோதன் மண்டபம் ஆகியவற்றில் நூல்வெளியீடுகள் நினைவுப் பேருரைகள், இலக்கிய வெளியீடுகள், கருத்தரங்குகள், அறிஞர் ஒன்றுகூடல், இலக்கியக்களம், அற்றைத் திங்கள், இசை நிகழ்ச்சிகள், சுகாதாரக்கருத்தரங்குகள் முதலியன சிறப்பாக நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற எமது ஊழியர்களான திரு.தெ.சத்தியசீலன், திருமதி சி.விமலநாதன் ஆகியோர் உதவி வருகின்றனர்.

நவரட்ணசிங்கம் மண்டபம்

யாழ் பல்கலைக்கழகத்தின் சட்டபீடம் இம்மண்டபத்தில் இயங்கி வருகின்றது. சட்டபீட மாணவர்களுக்கு உதவுமுகமாக இம்மண்டபம் அறைகளாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணியம் மாலதி மண்டபம்

மேற்படி மண்டபத்தில் படிப்பகம் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. பல்வேறு பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் இதனால் பெரிதும் பயன் பெறுகின்றனர். இப்படிப்பக மேற்பார்வையாளராக நூலக உத்தியோகத்தர்கள் செயற்பட்டு வருகின்றனர். இம்மண்டபத்தில் ஆத்மீக நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

சங்க அறைகள்

தற்போது ஐந்து அறைகள் உள்ளன. சங்க நிகழ்வுகள், தலைநகரில் நடைபெறும் நிகழ்வுகள் பரீட்சைகள் என்பனவற்றில் கலந்து கொள்ளவும், வைத்திய உதவிக்காக வருகை தருவோர் தங்கிச் செல்லவும் இவை வசதியாக அமைந்துள்ளன. மேலும் சில அறைகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அலுவலகத்திற்கு தேவையான
அலுவலக மேசை - 1
கோவை அலுமாரி - 1
என்பன கொள்வனவு செய்யப்பட்டது.

அலுவலக உத்தியோகத்தர்கள்

சங்க அன்றாடப் பணிகளுடன் சங்கத்தின் பல்வேறு பணிகளும் கடந்த காலங்களைவிடச் சிறப்புடன் நடக்க சங்க அலுவலகம் பெரிதும் உதவுகிறது. இங்கு நிர்வாக அலுவலராக திரு.ஆர்.சிவராஜா உதவி முகாமைத்துவ உத்தியோகத்தராக செல்வி க.ஹேமலதா அவர்களும், அவர்களும் அலுவலக உதவியாளராக திருமதி சி.விமலநாதன் அவர்களும் கடமையாற்றி வருகின்றனர். அலுவலகப் பணியாளராக செல்வன் தெ.சத்தியசீலன் கடமையாற்று வருகின்றார்.
இக்காலப்பகுதியில் கணக்கியல் முகாமைத்துவ உதவியாளராக இருந்த செல்வி கல்யாணி சுந்தரலிங்கம் அவர்கள் கடமையில் இருந்து விலகியுள்ளார்.

நூலகப் பணியில் பதில் பிரதம நூலகராக திருமதி தாரணி சுதாகரன் கடமையாற்றி வருகிறார். உதவி நூலகர்களாக திருமதி.ம.வித்யா, திருமதி ஜெ.மகிழ்ந்தினி, செல்வி க.சிந்துஜா ஆகியோர் கடமையாற்றுகின்றார்கள், செல்வி சு.பாமினி, செல்வி சி.நிஷாந்தனி, செல்வி து.சர்மிளா ஆகியோர் நூலகப் பயிலுனராக கடமையாற்றுகின்றனர். தற்காலிக நூலகப் பயிலுனராக செல்வி தி.நிருபா, செல்வி இ.கார்த்திகா, செல்வி அ.கார்த்திகா, செல்வி சி.சிவரூபி ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

இக்காலப்பகுதியில் பிரதம நூலகராகக் கடமையாற்றிய திருமதி ஜெயஸ்ரீ அசோக்குமார் அவர்களும், நூலகப் பயிலுனராக கடமையாற்றிய செல்வி சி.சுவேந்தினி அவர்களும் வெளிநாடு செல்லும் பொருட்டு நூலகப் பணியிலிருந்து விலகியுள்ளனர்.

நூல்களை கணினியில் பதிப்பேற்றும் பணியில் செல்வி ஜீ.கல்பனா, திருமதி எஸ்.பிரசாந்தினி, செல்வி மா.நல்லைமாமணி ஆகியோர் கடமையாற்றி வருகின்றார்கள்.

சிற்றுண்டிச்சாலை

சங்கத்தில் கல்விகற்கும் மாணவர்கள், படிப்பகத்தில் பயன் பெறுவோர் ஆகியோருக்கு இது பெரிதும் உதவியாக உள்ளது. சங்க மண்டபத்தில் நிகழ்வுகள் நடாத்துபவர்களுக்கும் சிற்றுண்டிச்சாலை மூலம் நாம் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றோம். திரு.தி.இராஜமனோகரன் இங்கு கடமையாற்றி வருகிறார்.

காவலர் சேவை

திரு.அ.தெய்வேந்திரம் அவர்கள் சங்கக் காவலராகப் பணியாற்றி வருகின்றார். அத்துடன் அவர் சங்கத்தின் சகல பணிகளிலும் ஆர்வத்துடன் உதவிவருகிறார்.

பதிப்புத்துறை விற்பனைக்குழு :~

பதிப்புத்துறை விற்பனைக்குழுச் செயலாளராக திரு.க.இரகுபரன் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். பதிப்பத்துறையினரால் இம் முறை மூன்று நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நூல் வெளியீடு

அ. நூல் - **"சதாவதானி ந.கதிரைவேற்பிள்ளை"**
தொகுப்பாசிரியர் - திரு.ஸ்ரீ பிரசாந்தன்

'சதாவதானி ந.கதிரைவேற்பிள்ளை' நூல்வெளியீடு 23.01.2010 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் திரு.ஜி.இராஜகுலேந்திரா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.சே.ஏகாம்பரநாதன் திருமதி சிவபாக்கியவதி ஏகாம்பரநாதன் ஆகியோரின் மங்கல விளக்கேற்றலோடு நிகழ்வு ஆரம்பித்தது. தமிழ்வாழ்த்தினை செல்விகள் பிரசாந்தனி இராஜ்குமார், கீர்த்தனா சச்சிதானந்தன், லோசிகா பிரதாபன், கீர்த்தனா மதிவதனன் ஆகியோர் இசைத்தார்கள். வரவேற்புரையை ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.ப.க.மகாதேவா அவர்களும் வெளியீட்டுரையை பதிப்புத்துறைக்குழுச் செயலாளர் திரு.க.இரகுபரன் அவர்களும் வழங்கினார்கள். முதற்பிரதியை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழையமாணவர் சங்க கொழும்புக் கிளைத் தலைவர் திருமதி யமுனா கணேசலிங்கம் பெற்றுக் கொண்டார். கருத்துரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் நன்றியுரையை திருமதி அ.புவனேஸ்வரி அவர்களும் வழங்கினார்கள்.

ஆ. நூல் - "செந்தமிழ் வளம் பெறவழிகள்"
ஆசிரியர் - பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம்

"செந்தமிழ் வளம் பெறவழிகள்" என்னும் நூல் பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம் அவர்களால் பதிப்பிக்கப்பட்டு 100 பிரதிகள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வு 25.04.2010 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திருமதி ரஜனி சந்திரலிங்கம் அவர்கள் தமிழ்வாழ்த்திசைத்தார். வரவேற்புரையை திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களும், ஆசியுரையை பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களும், வாழ்த்துக் கவிதையை வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களும், வெளியீட்டுரையை பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன் அவர்களும் நிகழ்த்தினார்கள். முதற்பிரதியை அகில இலங்கை இந்துமாமன்ற தலைவர் திரு.வி.கைலாயபிள்ளை அவர்கள் பெற்றுக் கொண்டார். நயவுரையை திரு.ஏ.எம்.திருநாவுக்கரசு, கலாபூசணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோரும், நன்றியுரையை திரு.எஸ்.பாஸ்க்கரா அவர்களும் நிகழ்த்தினார்கள். நிகழ்ச்சியை செல்வி சற்சொரூபவதி நாதன் அவர்கள் சிறப்பாக தொகுத்து வழங்கினார். இந்நூல் வெளியீட்டு விழாவில் அன்பளிப்பாக கிடைத்த 80,000 ரூபா இளவாலை புனித ஹென்றியரசர் அரசினர் பாடசாலையில் இருக்கும் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. இதற்கான நன்றிக் கடிதம் கிடைக்கப் பெற்றது.

இந்நிகழ்விற்கு வினம்பர மூலம் நிதியுதவிய நிறுவனங்கள்:
வெள்ளவத்தை கொமசல் வங்கி, வெள்ளவத்தை ஹற்றன் நஷனல் வங்கி, வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலறி ஆகியவை அனுசரணை வழங்கி இருந்தன. துணைச் செயலாளர் திரு.எஸ்.பாஸ்க்கரா விழாவுக்கான செலவை கொடுத்துதவினார்.

இளைஞர் தளபதி இர.சிவலிங்கம் நூல்வெளியீடு
இ. நூல் - "இளைஞர் தளபதி இர.சிவலிங்கம்"
ஆசிரியர் - சாரல் நாடன்

"இளைஞர் தளபதி இர.சிவலிங்கம்" என்னும் நூல் வெளியீடு 09.07.2010 அன்று வெள்ளிக்கிழமை சங்கத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தமிழ்வாழ்த்தினை திருமதி சொர்ணலதா பிரதாபன் இசைத்தார். மலர் அஞ்சலியை திரு.எச்.எச்.விக்கிரமசிங்காவும் வரவேற்புரையை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் திரு.ஜி.இராஜகுலேந்திரா அவர்களும், நூல் அறிமுக உரையை திரு.அந்தனி ஜீவா அவர்களும், நிகழ்த்தினார்கள். முதற்பிரதியை புரவலர் புத்தகப் பூங்கா நிறுவுநர் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் அவர்கள் பெற்றுக் கொண்டார் நயவுரையை திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.தை.தனராஜ் அவர்களும் சிறப்புரையை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களும், நூலாசிரியர் உரையை திரு.சாரல் நாடன் அவர்களும், நன்றியுரையை கொழம்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களும் நிகழ்த்தினார்கள்.

ஈழத்து நூல்கள் விற்பனை நிலையம்
ஈழத்து நூல் விற்பனை நிலையத்தில் செல்வி சி.சத்தியஜோதி அவர்கள் சிறப்பாகக் கடமையாற்றி வருகின்றார். ஈழத்து நூல்களுடன் மாணவர்களுக்கு தேவையான கொப்பி, எழுதுகருவி, பென்சில்கள் போன்ற பொருட்களும் இவற்றுடன் போட்டோப் பிரதிகள் அச்சடித்துக் கொடுத்தல், பதிப்பு வேலைகள் என்பனவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பரிசில் நிதியக்குழு :~
இக்குழுவின் செயலாளராக திருமதி வசந்தி தயாபரன் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இவ்வாண்டு பரிசில் நிதியம் என்னும் பெயரில் ரூபா நான்கு இலட்சம் (ரூ 400,000/=) நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது. அதன் மூலம் கிடைக்கும் வட்டியை பரிசில் நிதியக்குழு தனது செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமூக மேம்பாட்டுக்குழு :~
இக்குழுவின் செயலாளராக திரு.த.சிவஞானரஞ்சன் அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

மக்கள் நலன் பேணும் நிகழ்வுகள்
வைத்தியபரிசோதனையும் மருந்துவழங்கலும் :
ஒவ்வொரு மாதமும் 1ஆம், 3ஆம் திங்கட்கிழமைகளில் மாலை 3.30 - 5.30 மணிவரை வைத்தியகலாநிதி எஸ்.எஸ்.அருளானந்தம் அவர்களால் இலவச மருத்துவப் பரிசோதனை செய்யப்படுவதோடு மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டு நோய்கள் சம்பந்தமான அறிவுறுத்தல்களும் வழங்கப்படுகின்றன.

நீரிழிவு மாதத்தை முன்னிட்டு வோர்க்ஹார்ட் (Workhardt) நிறுவனமும் வைத்தியகலாநிதி எஸ்.எஸ்.அருளானந்தம் அவர்களும் இணைந்து நீரிழிவு சம்பந்தமான பரிசோதனைகளை மேற் கொண்டார்கள்.

சுகாதாரக் கருத்தரங்குகள் :
27.09.2009, 25.10.2009, 29.11.2009, 03.01.2010 28.02.2010, 28.03.2010, 25.04.2010, 30.05.2010,

27.06.2010, 25.07.2010 ஆகிய நாட்களில் முறையே "ஆரோக்கியத்தில் ஆன்மீகத்தின் பங்கு", "ஆரோக்கியத்தின் அன்பின் வடிவம்", "நீரிழிவுநோய் தொடர்பான சிக்கல்கள்", "முதியோரின் உடல் நலப் பிச்சினைகள்". "ஆரோக்கியத்தில் உடல் உழைப்பின் பங்கு", "சரும நோய்கள் - தடுக்கும் வழிவகைகள்", "உணவுக் கால்வாய் புற்றுநோய்கள்", "உணவு ஒவ்வாமையும் - தவிர்க்கும் வழிமுறைகளும்" "ஆரோக்கியத்தில் நோய்முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்", "எமது இதயத்தைப் பாதுகாப்போம்" ஆகிய விடயங்கள் பற்றிய கருத்தரங்குகள் கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன், துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா, துணை நிதிச் செயலாளர் வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றன.
இக்கருத்தரங்கு நிகழ்வுகள் வைத்தியகலாநிதிகள் எஸ்.சண்முகதாஸ், ஏ.எஸ்.அனுஷ்யந்தன், முரளி வல்லிபுரம், விக்னவேணி செல்வநாதன், சி.எஸ்.நச்சினார்க்கினியன், எஸ்.சிவதாஸ், ஜின்னாஹ் ஷரிபுத்தீன் எஸ்.எஸ்.அருளானந்தம், திரு.வை.தர்மேந்திரா, தாதிகள் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி ரி.விநாயகமூர்த்தி, சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோரின் ஒத்துழைப்புடன் கொழும்புத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.த.சிவஞானரஞ்சன், உளநல ஆலோசகர் திரு.கா.வைத்தீஸ்வரன் ஆகியோரின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெறுகின்றன.

மனித நேய நம்பிக்கை நிதியம் என்ற அமைப்பின் ஊடாக இடைத்தங்கல் முகாமில் உள்ள மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கான கையேடுகள், முன்னோடிப்பரீட்சைகள், கருத்தரங்குகள், கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

சமூக மேம்பாட்டு குழுவின் செயற்பாடு சிறப்பாக நடைபெற செல்வி சற்சொரூபவதி நாதன் அவர்கள் ரூபா பத்தாயிரம் அன்பளிப்பாக தந்துள்ளார்கள். இவ்வன்பளிப்பு மூலம் வெள்ளை நிற எழுது பலகையும் அதை நிறுத்திவைப்பதற்கான தாங்கியும் (Stand) கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மாங்குளம் காணி
